# கொழும்பிலும் ஆலய பிரவேச ஆர்ப்பாட்டத்துக்கு திட்டம்


Registered as a Newspaper in Ceylon * ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

கொலிசெக்டி சுண். 49 மலர் 10
சுண் 889 National Tamil Daily இதழ் 168 தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கேசு ஆடி 13 ஐ அவ் 2 ஞாயிற்றுக்கிழமை (28-7-68)


கொழும்பு, சனி

ஹரிஜன ஆலயப்பிரவேசத்துக்கு விரைவில் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தைத் தூண்டும் நோக்கத்துடன் கொழும்பிலும் 'ஆலயப்பிரவேச ஆர்ப்பாட்ட ஊர்வலம்' நடத்த சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

இந்த 'ஆலயப்பிரவேச ஆர்ப்பாட்டம்'' அடுத்த மாதம் 7-ம் திகதி நடைபெறுமென்று கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. என். சண்முகதாசன் தெரிவித்துள்ளார்.

ஆலயப் பிரவேசத்துக்காக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும் சத்தியாக்கிரக இயக்கமும் தோல்வி யடைந்துவிட்டதால் அடுத்து உறுதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்கத்தைத் தூண்டுவதற்காக என்றும் இதற்காக கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்த விருப்பதாகவும் ஹரிஜனப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

# வடபகுதி நிலத்தின் அடியில் பெட்ரோல் ஊறும் சாத்தியம்

## பிரஞ்சு நிபுணர்குழு அறிக்கை மீண்டும் அடுத்தவருடம் ஆராய்ச்சி

கொழும்பு, சனி

வடமாகாணக் கரையோரப் பகுதிகளின் நிலத்தின் அடியில் எண்ணெய் கிடைக்கக்கூடிய சாத்தியங்களிருக்கலாம் என்று இப்பகுதிகளில் பரிசோதனை செய்த பிரெஞ்சு ஸ்தாபன நிபுணர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்திருப்பதைத் தொடர்ந்து வடக்கு, வடமேற்குப் பகுதிக் கரையோரப் பகுதிகளில் நிலத்தின் கீழ் இரண்டாவது கட்ட ஆராய்ச்சியை அடுத்த வருடத்தில் ஆரம்பிப்பதற்கு பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய மாகாணங்களின் நிலத்தினடியில் எண்ணெய், எரிவாயு இருக்கின்றனவா என்பது பற்றி மேற்கொண்டும் பரிசீலனை செய்தபின்னர்தான் நிச்சயமாகச் சொல்லமுடியுமென்றும் இப்போதைய நிலையில் இப்பகுதிகளில் எண்ணெய் படிவங்கள் இருக்கின்றதாஎனச்சொல்ல முடியாதிருக்கிறதென்றும் பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் விடுத்த ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.

வடமாகாணத்திலும் வடமேற்கு மாகாணத்திலும் பல இடங்களில் பிரஞ்சு ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் நிலத்தின் கீழ் எண்ணெய் படிவங்களிருக்கிறதா என்பதை அறியும் பொருட்டு ஆராய்ந்துவந்தனர், சென்றவருடம் மே மாதம் ஆரம்பமான இந்த ஆராய்ச்சி இவ்வருடம் ஏப்ரல் மாதத்துடன் முடிவடைந்தது.

ஆராய்ச்சி நடத்திய பிரஞ்சு நிபுணர் கோஷ்டி தனது அறிக்கையை சமர்ப்பித்துவிட்டது. இந்த அறிக்கை மீது மேற்கொண்டும் ஆராய்ச்சி நடத்தும்பொருட்டு பெட்ரோலியம் கூட்டுத்தாபன ஆராய்ச்சியாளர்களினதும் மண்வள ஆராய்ச்சியாளர்களினதும் பரிசீலனைக்கு இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

நிலத்தில் இதுவரை துளையிட்டுப்பார்க்கவில்லையென்றும் இவ்விதம் செய்து பார்த்தால்தான், நிலத்தின் கீழ் எண்ணெய், வாயு படிவங்கள் காணப்படுகின்றனவா எனபதைக்கண்டறிய முடியுமென்று பெட்ரோலியம் கூட்டுஸ்தாபன அறிக்கை தெரிவிக்கிறது.

## போராட்டத்தை விரிவுபடுத்த ஆராய்கிறார்களாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''ஹரிஜன மக்களின் உரிமைப் போராட்டத்தை சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணியினரும், புரட்சிவாத சமசமாஜ கட்சியினரும் கடைசி நேரத்தில் காட்டிக்கொடுத்துவிட்டனர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் ஊர்விட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் தொடர்ந்து நடத்திவந்த உரிமைப் போராட்டம் இதனால் பாதிக்கப்பட்டது.''

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க பொதுச்சபை சார்பிலிருவாளர்கள் எஸ். டி. என். நாகரத்தினம், மா. கனகரத்தினம் ஆகியோர் வெளியிட்ட அறிக்கையில்

(2 பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களுக்கு விடுமுறை கால விசேஷ பயிற்சி வகுப்பு

### யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்

கொழும்பு, சனி

ஆங்கில ஆசிரியர்களுக்கான விடுமுறைகால விசேஷ வகுப்புகள் அடுத்தமாதம 5-ம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம், மீரிகாமம், கண்டி, காலி, மகாரகமை, ஆகிய இடங்களில்நடைபெறவிருக்கிறது.

கல்வி இலாகா ஒழுங்கு செய்துள்ள இந்த விசேஷ பயிற்சி வகுப்புகளில் மாணவ ஆசிரியர்கள் உட்பட இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வகுப்பு கண்டியில் உள்ள வத்தையிலும் பேராதனையிலுமாக இரண்டு இடங்களில் நடைபெறும்.

## தாயகம் திரும்பும் அகதிகளுக்கு உடன் உதவநிதி

சென்னை, ஜூலை 27

இலங்கையிலிருந்தும் பர்மாவிலிருந்தும் தாய்நாடு திரும்பிவரும் இந்திய வம்சாவழியினருக்கு உடனடியான உதவிசெய்வதற்கு அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களின் உசிதாசாரப்படி உதவி புரிவதற்கென தென்ன ராஜ்யங்களுக்கென மத்திய அரசாங்கம் பதினான்காயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறது. இதில் தமிழ்நாடு அரசாங்கத்துக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைக்கிறது.

## அமைச்சர் தஹநாயக்கா இன்று வருகிறார்

குரும்பசிட்டி, ஞாயிறு

உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா இன்றுகாலை யாழ்ப்பாணம் வருகின்றார். புகையிரத மூலம் யாழ்ப்பாணம் வந்தடையும் அமைச்சர், சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் இன்று மாலை நடைபெறவிருக்கும் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம

(6-ம் பக்கம் பார்க்க)

## கீரிமலையில் புதைந்து கிடந்த எறிகுண்டு

### பொலிஸார் கைப்பற்றினர்

அளவெட்டி, சனி

புனித ஸ்தலமான கீரிமலையில் புதைந்து கிடந்த எறிகுண்டொன்றை நேற்று மாலை காங்கேசன்துறை பொலிசார் கண்டுபிடித்தார்கள். கைப்பற்றிய குண்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று புனித ஸ்தலமான கீரிமலையில் ஆடி அமாவாசை தீர்த்தத்துக்கு தீர்த்தமாடவந்த பக்தர்கள் மத்தியில் கேணிக்கருமாமையில் வெடித்த குண்டினால் சிலர் காயமடைந்ததைத் தொடர்ந்து பொலிசாரின் புலன்விசாரணையில் இன்னுமொரு குண்டு கண்டுபிடிக்கப்பட்டது

இதுசம்பந்தமாக புலன் விசாரணை செய்த காங்கேசன்துறை பொலிஸ் கோஷ்டி ஒன்று நேற்று கீரிமலையிலுள்ள அந்தியேட்டி மடத்துக்கு அருகாமையிலிருந்து மற்றொரு குண்டை கண்டுபிடித்தது.

இதுசம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிசார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டனர்.


சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

துன்பங்களால் உலகில் மிகப்பயனுண்டு. வாழ்க்கையில் நாம் மேன்மேலும் உயர அவை உதவுகின்றன. மரத்துக்கு உரம் எப்படியோ, அப்படி நமது ஆன்மீக வளர்ச்சிக்குத் துன்பங்கள் இன்றியமையாதன.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

கீலக வருஷம் ஆடி மாதம் 13-ந் திகதி
(28-7-68)


## வாலிபரும் எதிர்காலமும்

வெறும் நாற்காலி உத்தியோகத்தை இனியும் நம்பியிருக்காமல் நிலத்திலும் கடலிலும் தொழில் செய்ய வாலிபர்கள் முன்வந்தால் எதிர்காலத்தில் இலங்கைத் தமிழர் சுதந்திரமாக வாழ முடியுமென்றும், தமிழ்மக்கள் சமுக நிலையை உணர்ந்து உழைப்பதற்கான கட்டம் வந்துகொண்டிருக்கிறதென்றும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண. பிதா பிரான்ஸிஸ்லேஸ் ஒருவைபவத்தில் பேசுகையில் கூறியிருப்பது 'இன்றைய நிலையில் எப்படிப்போராட்டம் நடத்தலாம்' என்று ஆலோசனை செய்துகொண்டும் அறிக்கைகள் விடுத்துக்கொண்டுமிருக்கும் வாலிப முன்னணிகளுக்கும் வாலிபர்களுக்கும் சரியான சமயத்தில் தெரிவிக்கப்பட்ட சரியான யோசனையாகக் கொள்ளலாம்.

'அரசாங்க உத்தியோகத்தை நம்பியிருக்காதீர்கள், நிலத்தைப்பண்படுத்தி அதை நம்பியே வாழ்வதற்கு முற்படுங்கள்' என்று அரசியல் கட்சிகள் பல தடவைகளிலும் கூறிவந்திருக்கின்றன என்பது உண்மையே. காலஞ்சென்ற ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா ஒவ்வொரு பொதுக் கூட்டங்களிலும் 'வயல்களிலும் வேலியோரங்களிலும் முருங்கைத் தடிகளை நடுங்கள், மிளகாய், கத்தரிச்செடிகளை வையுங்கள், வெங்காயம் செய்கை பண்ணுங்கள்' என்று கூறியபோது பலரும் எள்ளிநகையாடியதுமுண்டு. இன்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தை ஆரம்பித்துச் சொல்லித்தருவதும் அரசாங்கம் உதவியும் ஊக்கமுமளிப்பதும் திரு. கந்தையா அன்று சொன்னதை அடிப்படையாகக் கொண்டதுதான். பிரதமரின் முயற்சி இன்று ஓரளவு வெற்றியளித்திருக்கிறது. என்றாலும் நமது வாலிபர்கள் இன்னும் இதை நன்கு உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

சிங்களத்தில் தேர்ச்சி பெற்றாலும் அரசாங்க உத்தியோகம் இனியும் முன்னர்போல் கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது. சிங்கப்பூர், மலேசியாவிலும் இனி இடமில்லை. அரசாங்க உத்தியோகம் மட்டுமல்ல கூட்டுத்தாபனங்களிலும், தனியார் துறைகளிலும் கூட தமிழ் வாலிபர்களுக்கு உத்தியோகம் கிடைப்பதென்பது சுலபமல்ல.

இந்நிலையில் தலைவர்கள் உரிமை பெற்றுத்தரத் தவறிவிட்டார்களென்று அவர்கள்மீது குற்றம் சுமத்திக்கொண்டிருப்பதிலோ, அவர்கள் தாங்களும் ஏமாந்து மக்களையும் ஏமாற்றிவிட்டார்களென்று அவர்கள்மீது கணை தொடுத்துக்கொண்டிருப்பதிலோ யாருக்கும் நன்மை கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது. தமிழ்மக்களின் எதிர்காலம் பொருளாதாரத்திலேயே தங்கியிருக்கிறது. இதற்கு வழிகாண வேண்டிய பொறுப்பு பெரும்பாலும் வாலிபர்கள் கையிலேயே தங்கியுள்ளது.

எனவே நிலத்தையும் நீர்வளத்தையும் எவ்வளவுக்கெவ்வளவு பயன்படுத்த வாலிபர்கள் முன்வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தமிழினத்தின் சுதந்திரம் தங்கியிருக்கிறது. குடியேற்றத் திட்டங்களில் குடியேறி விவசாயத்தைப் பெருக்கவும் விவசாயப்படையில் சேர்ந்து உணவு உற்பத்தியை அதிகரிப்பதுடன் முடிக்குரிய காணிகளைத் தமக்கே சொந்தமாக்கிக் கொள்ளக் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தவும் வாலிபர் முன்வரவேண்டும். கடற்றொழிலில் நல்ல வாய்ப்பிருக்கிறது. கைத்தொழிலுக்கும் சந்தர்ப்பமிருக்கிறது. விவசாயம், கடற்றொழில் கைத்தொழிலில் ஜப்பான் முன்னணியில் நிற்கமுடியுமானல், பாலைவனமாகக் கிடந்த இடம் இன்று இஸ்ரேலியரால் சோலைவனமாக முடியுமானல், நமது வாலிபர்கள், மனம்வைத்து உழைத்தால் தமிழினம் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழமுடியாதா? தலைவர்களும் வெறும் அரசியல் பேச்சை விடுத்து பொருளாதார முன்னேற்றத்துக்கு வாலிபர்களுக்கு வழிகாட்ட வேண்டியது அவர்களது கடமை.

## மாம்பழத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது

அளவெட்டி, சனி

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நேற்று மாம்பழத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

மேலைவீதியில் எழுந்தருளியிருக்கும் தண்டாயுதபாணிக்கு சங்காபிஷேகம் நண்பகல் நடைபெற்று அதையடுத்து நடைபெற்ற இசை கலைநிகழ்ச்சிகளும் சைவப் பிரசங்கத்தைத் தொடர்ந்து மாம்பழத் திருவிழாவும் நடைபெற்றது.

## இன்று கலைவிழா

உடுப்பிட்டி, ஞாயிறு

கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலையின் வருடாந்தக் கலைவிழா இன்று மாலை 7 மணிக்கு உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எம். சேதுசிகாமணி தலைமையில் நடைபெறவிருக்கின்றது. பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## பதவி உயர்வு

வவுனியா, சனி

சென்ற வருடம் நடைபெற்ற உள்ளூர் ஆட்சிச் சேவை எழுதுவினைஞர் சேவை இரண்டாம் பிரிவிற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### ஆசிரியருக்குக் கடிதம்

## 'ஆர்.ஜி. கூற்றை மறுத்தேன் எவரையும் குறைகூறவில்லை'

இம் மாதம் 15-ம் திகதி ஆட்சிமன்றத்தில் திரு. ஆர். ஜி. சேனநாயக்காவின் பேச்சை இடைமறித்து நான் கூறிய ஒரு வசனத்தைப் பலபடத் திரித்து தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தச் சிலர் முயற்சிக்கின்றனர். திரு. ஆர். ஜி. சேனநாயகா பேசும்போது "கோவியர்" என்ற ஹரிஜன மக்களை நசுக்குகின்றவர் உயர்சாதித் தமிழர்" என்று கூறினார். அப்போது நான் இடைமறித்து "கோவியர்" தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லவென்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை மறுக்கும் உயர்சாதி மக்களில் அவர்களும் சேர்ந்தவர்கள்" என்றும் கூறினேன். எந்த ஒரு வகுப்பையும் குறைகூறவோ இழித்துச்சொல்லவோ நான் முற்பட்டதாகச் சிலர் கருத்துக் கொள்ளப் பார்க்கின்றனர். "கோவியர்" தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ஆர்.ஜி.யின் கூற்றை நான் மறுத்தேனே அன்றி வேறில்லை.

அ. அமிர்தலிங்கம்
எம். பி.
வட்டுக்கோட்டை.

## போராட்டத்தை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி).

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

23-ம் தேதி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர், கோயில் முன்றலில் பெருமளவில் திரண்டனர். சமரசமுடிவு ஏற்படுமென்ற நம்பிக்கையில் காத்திருந்தனர். அரசாங்க அதிபரின் 5 அம்ச சமரச திட்டத்தை சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணி பிரதிநிதிகளும், புரட்சி வாத சமசமாஜக் கட்சி பிரதிநிதியும், ஏற்றுக்கொண்டதன் மூலமாக, ஹரிஜனமக்களின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டனர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் இந்த சமரச திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன் இரவு பகல், தொடர்ந்து போராட்டத்தை நடாத்த முடிவுசெய்தனர். இதே வேளையில் பொலிஸார், ஹரிஜனர்களை தாக்கி போராட்டத்தை நிறுத்தச் செய்தனர்.

பொலிஸ் பகுதியிடமோ, அரசாங்க உயர் அதிகாரிகளிடமோ நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக எமது வலிமையில் நம்பிக்கை வைத்து யாழ்ப்பாணம் முழுவதும் போராட்டத்தை விரிவுபடுத்த ஆராய்ந்துவருகிறோம்.

## கண்ணதாசன் எதிர் மனு

சென்னை, ஜூலை 27

கவிஞர் கண்ணதாசனை. காங்கிரஸ் கமிட்டியிலிருந்து வெளியேறும்படி அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து எதிர்மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே அளிக்கப்பட்ட தீர்ப்பை ரத்துச்செய்து மறு விசாரணைசெய்யும்படி கண்ணதாசன் சார்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள எதிர் மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த எதிர்மனு ஆகஸ்ட் 9-ல் விசாரணை செய்யப்படும்.

## காமராஜ் வீட்டு தீவைப்பு வழக்கு

புதுடில்லி, ஜூலை 27

பசுவதை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது காமராஜர் வீட்டுக்குத் தீயிட்ட சம்பவம் பற்றிய வழக்கு விசாரணை அடிஷனல் நீதிமன்றத்தில் நடந்த போது ஹரிராம் சாட்சியமளித்தார். கலகக்காரர்கள் மூன்று கோஷ்டியாக வீட்டிற்குள் நுழைந்ததாகவும், அவர்களிடம் தடிகளும் கற்களும் இருந்ததாகவும் அவர் கூறினார்.

## அதிபர்கள் இடமாற்றம்

அனலைதீவு, சனி

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு. வி. விஸ்வலிங்கம் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்திலிருந்து இடமாற்றம் பெற்றுள்ளார். சதாசிவ மகாவித்தியாலய அதிபர் திரு. இராசையா அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## புதிய வழி

வவுனியா, சனி

சிறு குற்றங்களைச் செய்யும் மாணவர்களை திருத்துவதற்கு வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பீ. இராமநாதன் புதிய வழியொன்றைக் கையாண்டு வருகிறார்.

இவர் இத்தகைய மாணவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவந்து நல்ல பிரஜைகளாக வாழ்வதற்கு வேண்டிய ஆலோசனைகளை வெகு இதமாகக் கூறுகின்றார். இதனால் பல மாணவர்கள் பயன்பெற்று வருவதாகத் தெரியவருகிறது.

## முழுக்குடும்பமும் கொலை

கொழும்பு, சனி

குடும்பமொன்று கொலைவெறியர்களின் கோடாரிக்கு பலியான சம்பவம் வலஸ்முல்லையில் நடந்துள்ளது. தாயும், தந்தையும் பிணமாகக் கிடக்க அவர்களது ஒரு மகன் தலைவேறு உடல் வேறான நிலையில் இறந்து கிடந்தான். நள்ளிரவில் படுக்கையில் வைத்து இவர்கள் வெட்டிக் கொலைப்பட்டார்கள் என்பதற்குச் சான்றாக இரத்தம் காய்ந்து போயிருந்தது. வலஸ்முல்லை பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.

## ஐயாறன் எழுதுகிறார்

சென்ற போயா தினத்தன்று கொழும்பு 'அப்சர்வர்' பத்திரிகையில் முதல் பக்கத்தில் ஒரு செய்தி வெளியாயிற்று. வடக்கு மாகாணத்திலுள்ள ஹரிஜனர்களில் பெரும்பாலோரும் சிங்களவர்களாக இருந்தவர்கள் என்று வித்தியாலங்கார பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் புதிய ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்திருக்கிறாராம். இதைப் பார்த்து திடுக்கிட்டு ஓரன்பர் டெலிபோன் செய்தார். அதுமட்டுமல்ல. உள்பக்கம் நீண்டதோர் கட்டுரை. இந்துக்களிடையேயுள்ள சாதிமுறை பெரியகொடுமை என்றும் ஏதேதோ அரைகுறை ஆராய்ச்சியில் பிதற்றியுள்ளார்.

கொழும்புப் பத்திரிகைகள் இதுவரை இல்லாதபடி இவ்வித "ஆராய்ச்சிகளை" சமயசஞ்சீவிபோல் இப்போது வெளியிடுவதன் நோக்கம் என்னவோ தெரியவில்லை. காரணம் எதுவாயிருப்பினும் தேசிய ஒற்றுமையை வளர்க்கவோ நாட்டின் அமைதியான முன்னேற்றத்துக்கோ இவ்வித விஷம ஆராய்ச்சிகள் சற்றும் உதவ முடியாது.

ஃ ஃ ஃ

இந்து சமூகத்திலே சாதிகள் பலபல இருக்கலாம். முன்காலத்தில் எல்லாம் தொழிலை வைத்து சாதிகள் ஏற்பட்டன. எல்லாத் தொழில்களும் சாதியினரும் கிராமிய சமூக அமைப்பிலே, ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவியாக இருந்து ஒத்துழைத்து வந்துள்ளனர். வேலையில்லாப் பிரச்னையே கிடையாது. யாரையும் கொடுமைப்படுத்தவோ, உயர்வுதாழ்வு கற்பிக்கவோ இந்த அமைப்பு ஏற்பட்டிருக்க முடியாது.

இப்போதுங்கூட தாழ்த்தப்பட்டவர் என்று கருதப்படும் சாதியினரைக் கேட்டால், அவர்கள் தங்களைத் தாழ்ந்தவர்களென்று கருதிக் கொள்வதில்லை. ஒவ்வொரு சாதியினரும் அவரவர்களுக்குள் உயர்ந்தவர்கள்தான். வேறு 'உயர்' சாதி எனப்படுபவருடன் கலப்பு விவாகம் செய்வதையும் அவர்கள் பொதுவாக விரும்புவதில்லை.

இங்குள்ள ஹரிஜனர்களைக் கேட்டால், அவர்கள் நிச்சயம் பேராசிரியரின் புதிய ஆராய்ச்சியை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதற்கு மாறாக இதைக் கண்டிக்கவும் செய்வர்.

சமூகத்தில் அவர்களுக்குச் சிற்சில குறைகள் இருக்கலாம். ஆனால் அக்குறைகளைத் தீர்க்க தமிழரிலேயே பலரும் பொதுவாக முனைந்து வருகிறார்கள். மாவிட்டபுர முருகனும் கருணை பாலிக்கத்தான் போகிறார். மிக வைதிகமாக நடைபெறும் நல்லூர் முருகன், சிவன் கோவில், பெருமாள் கோவில் எல்லாம் திறக்கப்பட்டுவிட்டன. அதைப் பற்றி அப்போது கொழும்புப் பத்திரிகைகள் பாராட்டி ஒரு வார்த்தையும் கூறவில்லை. பேராசிரியர்கள் யாரும் இவ்வித ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதவில்லை. தமிழர்களை மேலும் பிளவுபடுத்தி, அவர்களை ஒழித்துக்கட்டத்தான் இவ்வித முயற்சிகள் என்று தோன்றுகின்றது.

தமிழர்களிடையே மட்டுமல்ல தெற்கே சிங்களவர்களிடையேயும் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கத்

(3-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

தான் செய்கிறார்கள். அவர்கள் அதற்குமுன் எப்படி இருந்தனர்? தமிழர்களாகவா? பயனற்ற, விஷமத்தனமான இவ்வித ஆராய்ச்சிகளைவிட்டு நாட்டு மக்களை ஒன்றுபடுத்தி முன்னேறச் செய்யக்கூடிய பணிகளே இன்று தேவையாகும்.

ஃ ஃ ஃ

ஊனவனை உடலவனை உயிரானானை உலகேழுமானானை உம்பர்கோனை, வானவனை மதிசூடும் வானவனை மலைமகள் முன்வராகத்தின் பின்பே சென்ற கானவனைக் கயிலாய மலையுளானைக் கலந்துருகி நைவார் தம் நெஞ்சினுள்ளே, பானவனைப் பள்ளியில் முக்கூடலானைப் பயிலாதே பாழே [illegible]

—அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செக். தலைமைப்பீடத்தில் பிளவு?

## ஒற்றுமைகோரும் மகஜரில் கைச்சாத்திட ஆயிரக்கணக்கானோர் கியூவில் நின்றனர்

பிராக், ஜூலை 27
செக்கோஸ்லாவாக்கியத் தலைநகரான பிராக்கில், சோவியத் யூனியனுடனான அதிமுக்கிய பேச்சுவார்த்தைகளின்போது, அதன் நெருக்கடியின் முகத்தில், அதற்கெதிராக ஒற்றுமையாக நிற்கும்படி செக். கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையைக் கோரும் ஒரு மகஜர் மீது கைச்சாத்திடும் பொருட்டு, ஆயிரக்கணக்கான மக்கள் 'கியூ' வரிசையில் நின்றனர்.

செக்கோஸ்லாவாக்கிய அறிவாளிகள் குழுவினரால் தயாரிக்கப்பட்ட இந்த மகஜரில், செக்கோஸ்லாவாக்கியாவின் சுதந்திரமும், தனித்துவமும் மதிக்கப்பட வேண்டுமென்றும், நாட்டின் புதிய சுதந்திரக்கொள்கை தொடரப்படவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. அத்துடன், நாட்டின் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், நாட்டுத்தலைமைப்பீடத்தில் எவ்வித பிளவும் வெட்கத்துக்குரியதென்பதுடன், பாதகமான விளைவுகளை உண்டாக்கலாம் என்றும் இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

செக். தலைமைப்பீடத்தில் பிளவு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் செய்திகள் பிராக்கில் மறுக்கப்பட்டுள்ளன.

செக். தலைவர் திரு. டுபெக், தலைமைப்பீடத்தில் பிளவு எதுவும் இருப்பதென்பதை மறுத்துக்கூறியபோது ரஷ்யாவுடனான பேச்சுவார்த்தைகளுக்குச் செக்கோஸ்லாவாக்கிய ஆட்சிமன்றம் ஆயத்தங்கள் தயார்செய்து வருவதாகவும், அவை ஒற்றுமையுடனேயே செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். செக்கோஸ்லாவாக்கியாவின் கொள்கைக்கு கம்யூனிஸ்ட் நாடுகளும் கம்யூனிஸ்ட் அல்லாதவையும் முழு ஆதரவும் தெரிவித்திருப்பதாகவும் திரு. டுபெக் கூறியுள்ளார்.

# இராணுவ நடவடிக்கைக்கு ரஷ்யா தருணம் பார்க்கிறது

## யூகோஸ்லாவிய எச்சரிக்கை

பெல்கிரேட், ஜூலை 27
செக். நிலைமை பற்றிக் குறிப்பிடுகையில், அந்நாட்டின் தலைமைப்பீடத்தில் பிளவு ஏதாவது ஏற்படும்வரை ரஷ்யா பார்த்துக்கொண்டிருப்பதாக யூகோஸ்லாவிய ரேடியோ அரசியல் விமர்சகர் கூறியுள்ளார். அவ்விதம் பிளவு ஏற்படும் பட்சத்தில், தனது டாங்கிகளை அந்நாட்டுக்குக் கொண்டுசெல்லும்நோக்கத்துடனேயே ரஷ்யா இவ்விதம் பார்த்துக்கொண்டிருப்பதாகவும் அந்த விமர்சகர் மேலும் குறிப்பிட்டார் செக் நிலைமையை 20 ஆண்டுகளுக்குமுன் யூகோஸ்லாவியாவில் இருந்த நிலைமைக்கு அவர் ஒப்பிட்டார்.

# பிரிட்டிஷ் நிருபர் நாடு கடத்தப்பட்டார்

பிராக், ஜூலை 27
செக்கோஸ்லாவாக்கியாவிலுள்ள பிரிட்டிஷ் நிருபர் ஒருவர், அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். இவர் பிரிட்டிஷ் பத்திரிகையான 'லண்டன் டைம்ஸி'ன் பாதுகாப்புத்துறை நிருபராவர்.

இந்த நிருபர், செக். எல்லையில் நிறுவப்பட்டுள்ள சோவிய ராணுவப் பிரிவொன்றினால் தடுத்து நிறுத்தப்பட்டு, சுமார் 3 மணி நேரம் விசாரணைசெய்யப்பட்டார். பின்னர் அவர் செக். அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். செக். அதிகாரிகளால் அவர் இன்றும் ஓர் எட்டு மணி நேரம் விசாரிக்கப்பட்ட பின் நாடு கடத்தப்பட்டார். அந்நிருபர் இப்போது லண்டன் போய்ச்சேர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செக்கோஸ்லாவாக்கியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தனது முழு ஆதரவையும் தெரிவித்து பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு செய்தியை அதற்கு அனுப்பிவைத்துள்ளது.

2 இஸ்ரேலிய

## இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்

டெல்அவிவ், ஜூலை 27
ஜோர்தான் ஆற்றுக்கு அருகே, அரபுத் தேசியவாதிகளுடன் ஏற்பட்ட ஒரு மோதலில், 2 இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டதாக டெல் அவிவ் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், இஸ்ரேலிய மந்திரிசபையை மாற்றியமைப்பதென இஸ்ரேலியப் பிரதமர் திரு. எஷ்கோல் முடிவுசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரிய

## சமாதானப் பேச்சுகள்

நியாமி, ஜூலை 27
நைஜீரிய உள்நாட்டுப் போருக்கு ஒரு தீர்வு காணுமுகமாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது பற்றிச் சமஷ்டி நைஜீரியாவும், பிவ்வினே பிராவ்ராவும் இங்கு உடன்பாடு கண்டுள்ளன.

நைஜீரிய சமாதானப் பேச்சுவார்த்தைகள், எதியோப்பியத் தலைநகரான அடிஸ் அபாபாவில், அடுத்த மாதம் 6ந் திகதிக்கிடையே ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது.

## தானியப் பாதுகாப்புக்கு ரொக்கட்டுகள்

மாஸ்கோ, ஜூலை 27
அஸன் பள்ளத்தாக்கில் [ஜோர்ஜியா] 400 ஆயிரம் ஹெக்டர் வயல்களும், திராட்சைத் தோட்டங்களும் ஆலங்கட்டி வீழ்ச்சியிலிருந்து ரொக்கட்டுகளால் பாதுகாக்கப்படுகின்றன என்று 'பிராவ்டா' தெரிவித்துள்ளது. ஆலங்கட்டிப் புயல்களிலிருந்து திராட்சைத் தோட்டங்களுக்கு ஏற்படும் பல லட்சக் கணக்கான ரூபிள் நஷ்டம் தவிர்க்கப்பட்டுள்ளது.

## தெ. கி. ஆசியாவில் சமாதானம்

### அமெரிக்க கொள்கை

சின்சினாட்டி, ஜூலை 27
"தென்கிழக்கு ஆசியாவில் சமாதானம் நிலவ வேண்டும் என்பதே அமெரிக்காவின் ஒரேகுறிக்கோள். அமெரிக்க துருப்புகளுக்கு கௌரவமான பாதுகாப்பு அளிப்பதற்கான மார்க்கமே இத் துறையில் அமெரிக்காவிற்கும் எல்லாமாகும்" என்று ஜனாதிபதி ஜோன்சன் இங்கு கூறினார். மத்திய மேற்குப் பிராந்தியத்திலிருக்கும் சின்சினாட்டி நகருக்கு டெக்ஸசிலிருந்து வந்து சேர்ந்த ஜனாதிபதி தேசிய கவர்னர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டார். அவ் வேளையிலேயே மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:- "தென்கிழக்கில், குறிப்பாக வியட்நாமில் அமைதி காண்பதற்காக அமெரிக்கா பெரும் பிரயத்தனங்களைச்செய்துகொண்டு வருகிறது. ஆனால், வடவியட்நாம் எத்தகைய ஒத்துழைப்பும் இத்துறையில் நல்கவில்லை. தெற்கு வியட்நாம் மக்கள் விரும்பாத ஓர் ஆட்சியை பலாத்காரமாகப் புகுத்துவதற்கு நாங்கள் ஒருபோதும் சம்மதமளிக்க மாட்டோம். கம்யூனிச சர்வாதிகாரத்தை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் மீது கம்யூனிச ஆட்சி முறையை பலாத்காரமாக நுழைக்கவும் நாம் அனுமதிக்கப்போவதில்லை".

## டிரக் விபத்தில் 22 பேர் மரணம்

லக்னோ, ஜூலை 27
உத்தரப்பிரதேசத்தில், [illegible] 22 பேர் உயிர் இழந்தனர். மற்றும் 14 பேர் காயமுற்றனர். இவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது.

அமெரிக்க

# உப ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதில்லை

## எட்வார்ட் கென்னடி அறிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 27
காலஞ்சென்ற அமெரிக்க செனேட்டர் ரொபேட் கென்னடியின் இளைய சகோதரரான திரு. எட்வார்ட் கென்னடி, ஜனநாயகக் கட்சியின் சார்பில், அமெரிக்க உப ஜனாதிபதித் தெரிவுக்குத் தமது பெயரைச் சமர்ப்பிப்பதில்லை என்று அறிவித்துள்ளார்.

அமெரிக்க உப ஜனாதிபதித் தெரிவுக்கு நிற்பது பெரும் கௌரவம் என்றாலும், சொந்தக் காரணங்களை முன்னிட்டுத் தாம் இந்த வருடம் போட்டியிட முடியாதெனத் திரு. எட்வார்ட் கென்னடி கூறியுள்ளார்.

# பிரிட்டனின் இரண்டாவது இருதய மாற்றுப் பொருத்தம்

லண்டன், ஜூலை 27
பிரிட்டனின் இரண்டாவது இருதய மாற்றுப் பொருத்தத்தை, லண்டன் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர்கள் குழுவொன்று வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளது.

பிரெடெரிக் வெஸ்ட் என்பவர்மீது முதலாவது இருதய மாற்றுப் பொருத்தத்தைச் செய்த அதே டாக்டர்கள் குழுவே இப்போது இரண்டாவது தடவையாக 48 வயதான ஒருவர்மீது இருதய மாற்றுப் பொருத்தத்தைச் செய்துள்ளது. முதலாவது பிரிட்டிஷ் இருதய மாற்றுப் பொருத்தக்காரர், 46 நாட்களுக்குப் பின் மரணமானார்.

தற்போது இருதய மாற்றுப் பொருத்தம் செய்யப்பட்டவரின் உடல்நிலை, ஓரிரண்டு தினங்களுக்குக் கவலையளிப்பதாக இருந்தாலும், பின்னர் அபிவிருத்தியடைந்துவிடுமென டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்க நகர்களில் மீண்டும் இனக்கலவரம்

வாஷிங்டன், ஜூலை 27
அமெரிக்காவில், இனக்கலவரங்கள், சில நகரங்களில் விட்டுவிட்டு வெடித்துக்கொண்டே இருக்கின்றன.

அண்மையில் கிளெவ்லாந்தில் நடைபெற்ற நீக்ரோ கலகத்தில் 10 பேர் மாண்டனர். இவர்களில் இருவர் பொலிஸாராவர். அங்கு இப்போது, காலை தொடக்கம் மாலைவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது.

கிளெவ்லாந்தில் நேற்று மீண்டும் நடைபெற்ற கலவரங்களின்போது, 30 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

சிக்காகோவில் நேற்று வெடித்த இனக்கலவரங்களின்போது, பொலிஸார் 25 பேரைக் கைதுசெய்தனர்.

## தாய்லாந்திலுள்ள அமெரிக்கத்தளம் தாக்கப்பட்டது

பாங்கொக், ஜூலை 27
தாய்லாந்திலுள்ள அமெரிக்கத்தளம் ஒன்றின்மீது, இனந்தெரியாத தரைப்படையொன்று நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளது.

இத்தாக்குதலினால், விமானம் ஒன்று சேதத்துக்குள்ளானதாகவும், 4 அமெரிக்கர்கள் காயமுற்றதாகவும், அங்குள்ள அமெரிக்க இராணுவத்தளபதிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான தளம், தாய்லாந்தில் அமெரிக்கா நிறுவியுள்ள 6 தளங்களில் ஒன்றாகும்.

டாநாங்மீது

## வியட்கொங் தாக்குதல்

சைகோன், ஜூலை 27
தென்வியட்நாமிலுள்ள அமெரிக்கத்தளமாகிய டாநாங்கின்மீது நேற்று வியட்கொங்கியர் ரொக்கெட் தாக்குதல் நடத்தினர்.

டாநாங் தளம்மீது அண்மைக்காலத்தில் அவர்கள் நடத்தும் இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

தளத்துக்கு அதிக சேதம் ஏற்படவில்லையென்றும் ஆட்சேதம் எதுவுமில்லையெனவும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## அமெரிக்க குண்டுவீச்சு நல்லதென்கிறார் லாவோஸ்பிரதமர்

பாரிஸ், ஜூலை 27
வடவியட்நாம்மீதான அமெரிக்க குண்டுவீச்சு, நல்ல,பயனுள்ள நடவடிக்கை என லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவன்னாபூமா, பாரிஸில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் குண்டுவீச்சு,வடவியட்நாமின் விஸ்தரிப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுடன், தென்வியட்நாமுக்கும் அதிக பாதுகாப்பை அளிப்பதாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பாரிஸில் அமெரிக்க, வடவியட்நாம் பிரதிநிதிகளுக்கிடையே நடைபெறும்வியட்நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நல்ல பயனை அளிக்குமென அவர் நம்பிக்கைதெரிவித்தார்.

## கண்ணுக்கு தெரியாத ஒளி திருடரைக் கண்டுபிடிக்கும்!

லண்டன், ஜூலை 27
திருடர்களின் நடமாட்டத்தை அவதானித்து அறிவிக்கும் ஒரு புரட்சிகரமான அபாய அறிவிப்பு சாதனத்தைப் பிரிட்டிஷ் பொறியியல் நிபுணர்கள் படைத்திருக்கிறார்கள். இந்த அபூர்வ இயந்திரத்தின் கண்காணிப்பிலிருந்து எத்தகைய திருடர்களும் தப்பிவிடமுடியாது.

இந்த நவீன சாதனம் 'இன்பிரா' செங்கதிரை—அதாவது மனித கண்களுக்குப் புலப்படாத ஒருவகை ஒளிக்கீற்றை—மூலமாகக் கொண்டு இயங்குகிறது. இந்த அரூப ஒளிக்கீற்றை வீட்டுக்குள்ளேயும் வெளியேயும் இயக்கவைக்கலாம்.

விசேஷ கண்ணாடிகள்

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் முஸ்லிம்களுக்கு விரைவில் வீடமைப்புத் திட்டம்

### அரசாங்க அதிபர் வேர்ணன் தகவல்

நல்லூர், சனி

'காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குவதற்காக அரசாங்கம் ஒவ்வொரு தொகுதிக்கும் இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் எங்கெங்கே காணி வாங்குவதென்பது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம்களுக்கு வீட்டுவசதி குறைவென்பதை உணர்ந்த யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் முஸ்லிம் பகுதிக்கு ஒருபகுதிரூபாவை ஒதுக்கி, காணி வழங்கி வீடு கட்டும் திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார். இத்திட்டத்தால் முஸ்லிம்களது வீட்டுக்கஷ்டம் ஓரளவாவது நீங்கும் எனக் கருதுகின்றேன்.'

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா முஸ்லிம் பகுதியில் யாழ்ப்பாண பீடித்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தொழிற்சாலையைத்திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

முஸ்லிம் பெண்களும் சுருட்டுத்தொழிலில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இப்போதுதான் இந்த உரிமை முஸ்லிம் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரமாலிபாசா என்பவரே முதன் முதல் உலகில் முஸ்லிம் பெண்களுக்கு நாட்டின் சேவையில் பங்குபற்ற உரிமை வழங்கவேண்டுமெனக் குரல் எழுப்பியவர்.

முஸ்லிம் பகுதியில் நெசவுப் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தார் திரு. வேர்ணன் அபயசேகரா.

திருமதி வேர்ணன் அபயசேகராவும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார். டிறக்டர் திரு. சங்கரப்பிள்ளை, அட்வகேட் ஏச்.எம். சாஹிட், பீடித்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கக் காரியதரிசி திரு. எம். ஏ. எம். இப்ருகிம், சங்கப் போஷகர் முதலியோரும் பேசினர்.

## பரீட்சைகள் முடிந்தன

பருத்தித்துறை, சனி

அகில இலங்கை ரீதியாக நடந்த கல்விப் பகுதியின் 6ம் வகுப்புப் பரீட்சையும், பொ. த. ப. [சாதாரணம்] வகுப்புகளுக்கு வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்படும் விஞ்ஞானபாடப் பரீட்சைகளும் இன்றுடன் முடிவடைந்தன. மேற்படி பரீட்சைகள் காரணமாக இப்பகுதிப் பாடசாலைகள் 26, 27ந் தேதிகளில் மூடப்பட்டன.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 28—7—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை- 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 ஜதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய மிகதேங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துகள், 5-30 கான மஞ்சரி.

இரவு 6-15 சாளவாத்தியக் கச்சேரி, 6-45 பாவளம் 7-00 நாட்டோடிப்பாடல்கள். 7-30 விவாத மேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி—என். சண்முகரத்தினம்.

## உலகரட்சகர் திருநாள்

பருத்தித்துறை, சனி

உலக ரட்சகர் கோயில் வருடாந்த சுற்றுப்பிரகாரமும், ஆசீர்வாதமும் நேற்றைய தினம், பருத்தித்துறை கட்டளைக் குரவர் வண. எஸ். தேவராசாவின் தலைமையில் நடைபெற்றன. வடபகுதியின் பல பாகங்களிலுமிருந்து பெருந்திரளான மக்கள் விழாவில் கலந்துகொண்டனர். பாடற்பூசையுடன் விழா முடிவடைந்தது.

## இன்று பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

மானிப்பாய் புனித அன்னம்மாள் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை பெற்றோர் தினவிழா இன்று மாலை உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

## கண்ணுக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் இவ்வொலிக்கீற்றை வீட்டிலுள்ள திருப்பங்களின் மூலைகளுக்கூடாக வளைத்துச் செலலாம். யாராவது மனிதர் அல்லது பொருள் இவ்வொளிக்கீற்றில் பட்டதும்தான் தாமதம் உடனடியாக அபாய ஒலிகள் எழுப்பத்தொடங்கிவிடும்.

இந்த அதிசயக் கருவியைப் பொக்கிஷங்களுள்ள புனித ஸ்தலங்களிலும் கோவில்களிலும் பாவிக்கலாம். முக்கியமாக வங்கிகளின் பாதுகாப்புக்கு உகந்த சாதனம் இது



## ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் 10 வருடத்துக்கு மேலாக ஆசிரியராகவும், அரசாங்க கல்வித்திணைக்கள புத்தகப் பிரிவிலும், முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி அதிபராகவும் கடமையாற்றிய ஆசிரியர் திரு. வ. பொன்னம்பலம் 1-8-68ல் ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

ஆசிரியர் திரு. வ. பொன்னம்பலம் 'ஈழமணித் திருநாட்டின் இணையற்ற தமிழ்ப் பேச்சாளர், மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாளர், பிரபல எழுத்தாளர், உயர்ந்த சிந்தனையாளர் என்ற பெருமைகளை வெல்லாம் பெரும் புகழ்பெற்ற பெரியார்கள்—கல்விமான்களிடமிருந்து பெற்றுக்கொண்டவர். இப்பொழுது ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பணிபுரிந்துவரும் இவர் ஓர் எம். ஏ. பட்டதாரி.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்கு முன் பிரபல முற்போக்கு அரசியல் கட்சியொன்றின் மதிக்க பிரமுகராயிருந்து நாட்டுமக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டவர் இவர். சாதிமத பேதமற்ற சமுதாயமொன்றின் மூலமே தேசத்தின் சகல பிரச்னைகளுக்கும் ஒரு முடிவு காண முடியுமென்று நினைக்கும் முப்பத்திஏழு வயது இளைஞர்.

ஏழை விவசாயிகள்—பாமரமக்கள்—படித்தவாலிபர்கள் மத்தியில் செய்துவந்த சேவைகள்மூலம் ஏற்கெனவே தனக்கெனவோர் தனியிடத்தைப் பிடித்துக்கொண்டுள்ள இவர், தொடர்ந்தும் அவர்களின் உரிமைகளுக்காகப்போராட உறுதிபூண்டு தான் வகிக்கும் அரசாங்க ஆசிரியர் பதவியிலிருந்து 1-8-68ல் ஓய்வு பெறுகின்றார்.

கல்வி இலாகா கண்ணியம்மிக்க நல்லாசிரியனை இழக்கிறது! ஆசிரிய உலகம் அறிவாற்றல்மிக்கத் தொண்டனை இழக்கிறது. மாணவ சமூகம் மாண்புமிகு மேதையை இழக்கிறது! ஸ்கந்தவரோதயா இன்னுயிர் நண்பனை இழக்கிறது. ஆனால்... ஈழமாதா வோ நல்லதொரு தேசபக்தனைத் தேடிக்கொள்கிறாள் என்று மட்டும் மிக உறுதியாகச் சொல்லிக் கொள்ள முடியும்.

— குப்பிழானூர் கே. பி. நடனசிகாமணி

## நேபாளக் கோஷ்டி பார்வையிட்டது

சுழிபுரம், சனி

நேபாள நாட்டைச்சேர்ந்த கூட்டுறவுக் கோஷ்டி ஒன்று மாதகல் பகுதியிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்களையும் பண்டத்தரிப்பு ... [illegible]

# செய்திச் சுருக்கம்

### துண்டு விழுகிறது

இவ்வருடத்தில் முதல் 5 மாதங்களிலும் இலங்கையின் வர்த்தக மிச்சத்தில் 26 கோடி 33 லட்சம் ரூபா துண்டுவிழுகிறது.

ஃ ஃ ஃ

### ஆறு நிலையங்கள்

மன்னார் மாந்தை முசலி கரியாதிகாரி பிரிவுகளில் விவசாயிகளின் நலன் கருதி ஆறு பசளை விநியோக நிலையங்கள் நிறுவப்பட இருக்கின்றன.

ஃ ஃ ஃ

### வெளிநடப்பு

பாங் சமை ஊழியர்வேலைநிறுத்தத்துக்கு ஆதரவளிக்குமுகமாக சுமார் 20 அரசாங்கக் கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்த இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர்கள் ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி வெளிநடப்புச் செய்யவிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

### ஆராய்ச்சி

உருளைக்கிழங்குப்பயிருக்கு ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக விவசாய அமைச்சு ஆராய்ச்சித் திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளது.

ஃ ஃ ஃ

### எதிர்ப்பு

வெளிநாட்டவர்களுக்கும் வெளிநாட்டு மூலதனக்காரருக்கும் தேசிய பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய முறையில் கைத்தொழில்துறையில் சலுகைகள் வழங்கப்படுவதை வம்சாவளி இலங்கையர் வர்த்தகமன்றம் கண்டித்துள்ளது.

ஃ ஃ ஃ

### சிங்களத்தால் தடுமாற்றம்

கதிர்காமத்தில் அறிவிப்புகள் சிங்களத்தில் மட்டும் இருப்பதால் மொழி தெரியாத தமிழ்பேசும் அடியார்கள் தடுமாறுகின்றனராம்.

ஃ ஃ ஃ

### நடமாடும் வங்கி

கதிர்காம மாணிக்ககங்கைக் கரையோரத்தில் தகவல்நிலையத்திற்கு முன்னிலையில் நடமாடும் வங்கி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

(28 - 7 - 68)

ஆடி மீ 13 உ

ஞாயிற்றுக்கிழமை

திதி- திருதியை மாலை 5-47 மேல் சதுர்த்தி.

நட்சத்திரம்— மகம் பகல் 9-55 மேல் பூரம்.

ராகுகாலம் - 4-32— 6-02.

யமநேரம் - 9-02— 10-32.

இன்று பிறந்தவர்களுக்கு— உணர்ச்சிமயமான காலம். எளிதில் உணர்ச்சிவசப் படுவதால் வாழ்க்கையில் சில சிக்கல்கள் உருவாகலாம். விவசாயிகள் இவ்வாண்டு சமயோசிதமான பலனை அடைவர். தொழிலாளர்கள் தகராறுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். சிலர் வாழ்க்கையில் கொடுக்கல் வாங்கலால் பிணக்குகள் தோன்றக்கூடும். எதிர்பாராத பணமுடையால் சிலர் கடன்வாங்க நேரிடும். மாணவர்களாயின் கல்வியில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

மேஷம்- வீறு நடை போடு, வெற்றி உனக்கே.

ரிஷபம்- தொழில் சீர்பெறும், ஆனந்தநிலை.

மிதுனம்- தானிய விருத்தி, தன்னம்பிக்கை.

கடகம்- எதையும் தாங்கும் இதயம்வேண்டும்.

சிம்மம்- கோபப் பார்வை, சொல்லையில் கோணல்.

கன்னி- பேச்சுவன்மை, பெரும் புகழ் உண்டு.

துலாம்- ஏக்கத்தின் சாயல், ஏமாற்றமுண்டு.

விருச்சிகம்- கல்விநலன் அறிஞர்கள் ஆதரவு.

தனுசு- பாக்கியவிருத்தி பரம்பொருள் சிந்தை.

மகரம்- திடீர் தாக்குதல் திகைக்கவைக்கும் சம்பவம்.

கும்பம்- இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்

மீனம்- தடைபல தாக்கும், தன நஷ்டம்.

சோதிடக்கலாநிதி திருமலை வேலுப்பிள்ளை

## ஆசிரியர் இடமாற்ற பிரச்னை தீர்க்க ஒரு யோசனை

சுழிபுரம், சனி

''ஆசிரியர்களின் இடமாற்ற விஷயத்தை அரசியல்வாதிகளின் கையில் சிக்கவிடக்கூடாது. விருப்பு வெறுப்பற்ற கல்விமான்களைக்கொண்ட ஓர் சபையினால் தீர்க்கப்படவேண்டும்''

இவ்வாறு வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை வலிகாமம்மேற்கு தமிழ் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கூட்டம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. க. நல்லதம்பி தலைமைவகித்தார். வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க தனாதிகாரி திரு. இ. பொ. குமாரசாமி உட்பட மற்றும் பலர் பேசினர்.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:-

தலைவர்: க. நல்லதம்பி, உபதலைவர்கள்: செ. ஸ்ரீநிவாசன், க. ஞா. யோசெப், மா. தம்பிராசா, காரியதரிசி: நா. பொன்னையா, உபகாரியதரிசி: மு. குமரவேலு தனாதிகாரி: இ. ஆறுமுகம் நிர்வாக சபை யொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## கருத்தரங்கம்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கங்களின் கருத்தரங்கம் இன்று முதல் தொடர்ந்து 29, 30 வரை வட்டுக்கிழக்கு மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. முதல் நாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் வேணன் அபயசேகராவும், இரண்டாம்நாள் மேலதிக அரசாங்க அதிபர் ஜே. எம். சபாரத்தினமும், மூன்றும் நாள் கிராம அபிவிருத்தி குடிசை கைத்தொழில் உதவி அதிபர் எஸ். கந்தவனமும் கருத்தரங்குக்கு தலைமை வகிப்பார்கள். இக்கருத்தரங்கில் பல அறிஞர்கள் சமூக சேவையாளர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்

''சூரியன் மார்க்''

வாசனை சந்தனப் பவுடர்

சந்தன வில்லைகள்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைப்பந்தாட்டம், கரபந்தாட்டம்

# யாழ். மாவட்ட பாடசாலை போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"ஒரு நாட்டுக்கு கல்வி எவ்வளவு முக்கியமோ, அதே போல் விளையாட்டும் அந்த நாட்டுக்கு மிக முக்கியமாகும். விளையாட்டுத்துறையில் ஈடுபடும் ஒரு வீரனுக்கு முதலில் கிடைக்கும் பரிசு தோல்விதான். தோல்விதான் வெற்றியின் முதல்படி. தோல்வியைக் கண்டு சோராது, முயற்சி செய்து வெற்றி பெறுவதே உண்மையான வீரனின் இலட்சியமாகும்"

இவ்வாறு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற, யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளிடையே நடாத்தப்பட்டு வந்த கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட போட்டியின், இறுதி ஆட்டத்துக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட நீதிபதி ஜனாப் ஐ. எம். இஸ்மையில் கூறினார்.

இப்போட்டிகளுக்கு வடமாகாண உதவி கல்வி அதிபதி திரு. தணிகாசலம் தலைமை வகித்தார்.

இறுதிப் போட்டியின் விபரம் வருமாறு:

## வலைப்பந்தாட்டம்

சிரேஷ்டபிரிவு: இப்போட்டியில், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடமும் உடுவில் மகளிர் கல்லூரியும் கலந்து கொண்டன. இப்போட்டியின் ஒவ்வொரு கட்டமும் ரசிப்பாகவே காணப்பட்டது. இடைவேளையின் போது உடுவில் மகளிர் கல்லூரியே கூடுதலான புள்ளிகளைப் பெற்றிருந்த போதிலும், முடிவில் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மிக திறமையாக விளையாடினர். இக் கோஷ்டியின் முன்னணி வீராங்கனை செல்வி வேம்மா கடைசி நேரத்தில் திறமையாக விளையாடி தமது கோஷ்டிக்கு கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார். ஆட்ட முடிவில் உடுவில் மகளிர் கல்லூரியை, இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் 11—16 புள்ளிகளால் தோற்கடித்து முதலிடத்தைப் பெற்றது.

கனிஷ்டபிரிவு உடுவில் மகளிர் கல்லூரியாழ்ப்பாணம் திருக்குடும்பகன்னியர் மடத்தை 14—4: புள்ளிகளால் தோற்கடித்து முதலிடத்தைப் பெற்றது.

## கரப்பந்தாட்டம்

சிரேஷ்டபிரிவு: சிதம்பரா கல்லூரி அத்தியார் இந்துக் கல்லூரியை 15—1, 15—8 புள்ளிகளால் தோற்கடித்து முதலிடத்தைப் பெற்றது.

கனிஷ்டபிரிவில், யாழ்ப்பாணம் சிங்கள மத்திய மகா வித்தியாலயம் மிகத் திறமையாக விளையாடி, நடேஸ்வரா கல்லூரியை 15—4, 15—4 புள்ளிகளால் தோற்கடித்து முதல் இடத்தைப் பெற்றது.

[தே. நி]


மகிழ்ச்சிகரமான

3வது வாரம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயாதினங்களில் காலை 10-30 மணி

ரகுநாதன்

சந்திரகலா

தங்கவடிவேல்

நடித்த

நிர்மலா

எஸ்.ரி.ஆர்.பிலிம்ஸ் வெளியீடு.


# 'விளையாட்டுத்துறை பிரச்னைகளின் பிறப்பிடமாகக்கூடாது'

உடுப்பிட்டி, சனி

"வடமகுதியில் உடுப்பிட்டித் தொகுதியே விளையாட்டுத்துறையிலும், கலையிலும் முதலிடம் வகித்து வருவது இத்தொகுதி எம். பி. என்ற முறையில் எனக்குப் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைய வைத்துள்ளது. யாழ்ப்பாணப்பகுதியிலேயே சிறந்த கரபந்தாட்டவீரர்களை வதிரியிலும், இமையாணனிலுமே காணமுடியும்."

இவ்வாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கள கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிப் பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

இப்பரிசளிப்புவிழா இமையாணன் கி.மு. ச. தலைவர் திரு.க. வீரபாகு தலைமையில் நடைபெற்றது.

திரு.சிவசிதம்பரம்மேலும் பேசுகையில் 'விளையாட்டுத் துறையைப் பிரச்னைகளின் பிறப்பிடமாக்கக்கூடாது. இலகுவநலமிகள் விளையாட்டின் புனிதத்தை மாசுபடுத்த முயலுகின்றனர். சிறுவயதிலிருந்தே விளையாட்டில் ஈடுபடுபவர்கள் எதிர்காலத்தில் செல்வந்தர்களாகாவிடிலும் சிறந்த தேகாரோக்கியத்துடன் இன்பமாக வாழுவர்,

யாழ்ப்பாணபகுதியில்நடைபெற்றசம்பவங்கள்வருந்தத்தக்கது. சிலரின்பொறுப்பற்ற செயல்களினாலேயே இவ்வித சம்பவங்கள் ஏற்பட்டன. இதற்கு அவர்களே முழுப்பொறுப்பாளிகள்' என்று கூறினார்.

மற்றும் ஆசிரியர் திரு. க. மாணிக்கம், திரு. மயில்வாகனம் ஆகியோரும் பேசினர். உபசபாநாயகர் வெற்றியீட்டிய கழகங்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

இக்கரபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் வதிரி பொ. மர்ஸ் விளையாட்டுக்கழகம் சாம்பியன் ஆகிக் கலாநிதிக்கொழுந்து ஞாபகார்த்தக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது. புத்தூர் வீனஸ் கழகம் இரண்டாமிடத்தையும், கரவெட்டி கிபேஸ் விளையாட்டுக்கழகம் மூன்றுமிடத்தையும் பெற்றுக்கொண்டன.


மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி:6-30 9-30

விடுமுறைதினங்களில் 2 30.

ரவிச்சந்திரன்ஜெலயலிதா

நடித்த

குமரிப்பெண்

ராணி

(யாழ்ப்பாணம்)

ஜெமினி — சரோஜாதேவி

நாகேஷ் — விஜயநிர்மலா

நடித்த

பணமா பாசமா

வின்ஸர்

தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர்.

பி. சரோஜாதேவி

நடித்த

அரச கட்டளை

29-ந் திகதி வரை

MANOHARA

JAFFNA

Daily at 2-30, 6-30, 10-00 p.m

Rajendra Kumar & Sathana

in

ARZOO

[Hindi]

[Eastman color]

ஆர்ஸு [ஹிந்தி]

Music:- Shanker, Jeikashian.

REGAL JAFFNA

Daily at 4-15, 7-00 & 9-45 P M.

John Wayne & Rita Hayworth

in

Circus World


## வரி விளம்பரம்

### வாடகைக்கு

வீடு:

வண்ணார்பண்ணை சிவவிக்கப்புளியடி ஒழுங்கையில், [இந்துக் கல்லூரிக்குப் பின்புறமாக] புத்தம் புதிய வீடு வாடகைக்குவிடப்படும்.

விபரங்களுக்கு: க. இரத்தினசாமி, கரணவாய் தெற்கு, கரவெட்டி என்ற விலாசத்திற்கு மனுப்பண்ணவும். 1271

# "வேற்றுமைக் கண்கொண்டு நோக்கியகாலம்போய்விட்டது"

ஊர்காவற்றுறை, சனி

"கத்தோலிக்க சமயம், பிற சமயங்களை வேற்றுமைக் கண்கொண்டு நோக்கிய காலம் ஒன்றிருந்தது. சமய வேறுபாடு காட்டிப் பிரிவினைகளைப் பேணிய காலமுமிருந்தது. ஆனால் இப்போது சகல மதங்களும் இறைவனை அடையவே வழிகாட்டுகின்றன என்ற உண்மையைக் கத்தோலிக்க சமயம் உணர்ந்துவிட்டது."

ஊர்காவற்றுறை புனித ஜேம்ஸ் தேவாலயத்தில் 45 ஆண்டுகள் சங்கீஸ்தராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. பே. குருசுமுத்துவுக்கு சேவைநலம் பாராட்டி அளிக்கப்பட்ட வரவேற்பில் அல்லைப்பிட்டி றே. க. த. பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. அ. பெ. செல்லத்துரை கலந்துகொண்டுஉரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கத்தோலிக்க சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருவதாகவும், பல நூறு ஆண்டுகளாகப் பெற்ற சமயப் போதனைகளுக்கும், இப்போது பெறுகின்ற போதனைகளுக்கும் நிறைய வித்தியாசமுண்டென்றும், புதியவைகளைக் கத்தோலிக்கர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்.

திரு. க. கணேசலிங்கம் பேசுகையில் "எங்கே செல்கிறோம், ஏன் செல்கிறோம், ஏன் செய்கிறோம் என்று தெரியாமல் இன்றைய வாலிபர்கள் நடந்துகொள்கிறார்கள். வாழ்க்கையில் கடமையுணர்வு இல்லாதவன் வாழத் தகுதியற்றவன். தனக்கென இருக்கும் கடமையை உணர்ந்து, செய்து வீட்டையும், நாட்டையும் முன்னேற்றவேண்டிய பொறுப்பு இன்றைய இளைஞர்களுக்கு உண்டு" என்றார். புலவர் தமிழ்மாறனும் பேசினார்.

திரு. எல். பி. லூசியான் வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

## நோயாளர் கஷ்டம்

பருத்தித்துறை, சனி

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி இருப்பதாகவும், போதிய ஊழியர் இல்லையென்றும் அதன் கிளைவாகப் பல நோயாளர் உடனுக்குடன் அவசர சிகிச்சைபெற முடியவில்லையென்றும் மிக விரைவில் கட்டடங்கள் விஸ்தரிக்கப்படுவதுடன் போதிய வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டுமென்றும் பல பிரமுகர்களால் கைச்சாத்திடப்பட்ட மகஜர் ஒன்று, உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரத்துக்கும் பருத்தித்துறை எம். பி. கே. துரைரத்தினத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

4-வது கிரிக்கெட் டெஸ்ட்

## இங்கிலாந்து 3—163

லண்டன், ஜுலை 26

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும், அவுஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் இங்கிலாந்தில் நடைபெறும் 4-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆஸ்திரேலியாக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 315 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இன்றைய ஆட்டம் முடியும் போது இங்கிலாந்துக் கோஷ்டி மூன்று விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களை எடுத்துள்ளது. இங்கிலாந்து கோஷ்டியின் அடுப்படி வீரர்களாகிய டெக்ஸ்ஸரும், பரிங்டனும் ஆட்டமிழக்காது முறையே 12,10 ஓட்டங்களை எடுத்துள்ளனர்.

## காரைநகரில் திருடர் தொல்லை

காரைநகர், சனி

காரைநகர் மேற்குப் பகுதியில் கள்வர் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இருதினங்களுக்குமுன் ஒரு வீட்டில் புகுந்து ஒரு பெண்ணின் தங்கச்சங்கிலியை அறுக்க திருடர் முயற்சிக்கையில் அப்பெண் திடுக்கிட்டு எழுந்ததும் திருடர்கள் ஓடிவிட்டனராம். இத்திருட்டு முயற்சி பற்றி கிராமசேவகரிடமும் பொலிசாரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.


இப்பொழுது மக்கள் ஆதரவுடன்

வீறுநடை போடுகிறேன்

நான்

கெபிட்டல் பிளாஸா மைலன்

(கொழும்பு)

இன்று முதல்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

2-30 மணிக்காட்சியுடன் ஆரம்பம்

★ ரவிச்சந்திரன்

★ ஜெயலலிதா

மனோரமா-நாகேஷ்-முத்துராமன்

பேபி பத்மினி-மனோகர்

நடித்த

ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ்

நான்

இன்று மட்டும்

கிங்ஸ்லி

[கொழும்பு]

2.00,மாலை 6.00,9.30.

★ ஜெமினி கணேசன்

★ சரோஜாதேவி

★ தங்கவேலு

நடித்த

கல்யாணப்பரிசு

ஓர் முக்கிய அறிவித்தல்

பங்குப்பண நிலுவை

ஷை சம்பந்தமாய் 1-5-68-ல் அனுப்பிய அறிவித்தலின்படி ஆடி மாதம் 31-ந் திகதிக்கு முன்னதாக [31-7-68] நிலுவைப் பணம் செலுத்த தவறினால் உங்களால் முன் செலுத்தப்பட்ட பணத்தையும் இழந்தவர்களாகக் கருதப்படுவீர்களென்பதை மிகவும் கவலையுடன் ஞாபகப்படுத்த வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

இலங்கை நூற்றல் நெய்தல்

ஆலை (வரையறை) ஸ்தாபனம்

வல்லை,

உடுப்பிட்டி.

24-7-68. 901


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டும்"

## எஸ். ஜே. விக்கு வாலிப முன்னணி கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'மாவட்டசபை என்ற ஒன்றை நம்பி தமிழ்ப் பேசும் இனத்தின் உரிமை யைப்பறிக்கும் பல சட்டங்களை ஆமோதித்தீர்கள். மாவட்டசபை வராது என்றநிலை ஏற்பட்டதும் அரசாங்கத்தை விட்டுவெளியேறாது ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்.

தமிழரசுவாலிபமுன்னணி பொதுச்செயலாளர் திரு.ந. அருணாசலம் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில்மேற்கண்டவாறுகூறியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

சமீபத்தில் உங்கள் அரசியல் நடவடிக்கையால் மக்கள் உங்கள்மீதும், கட்சி மீதும் நம்பிக்கை இழக்கத் தொடங்கிவிட்டனர், பதவி ஆசைக்கு அடிமையாகிவிட்டீர்கள். ஏன் இன்னும் அரசாங்கத்தைவிட்டு தமிழரசுக்கட்சி வெளியேறவில்லையென்றுதான் மக்கள் கேட்கிறார்கள். மக்களோடு தொடர்பற்ற சிலரால் தாங்கள் திசைதிருப்பப்படுகிறீர்கள். நீங்கள் உடனடியாக வெளியேற வேண்டுமென மக்கள் விரும்புகின்றார்கள்.

# தலைவர்களை ஒதுங்கி நிற்கட்டுமாம்

## தமிழரசு வாலிப முன்னணி செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தமிழரசு வாலிப முன்னணி, தமிழரசுக்கட்சிக்கு உட்பட்டதுதான். அது தனித்து ஒன்றும் எதையும் செய்யமுடியாது என்பது உண்மையே. ஆனால் தமிழினம் தமிழரசுக்கட்சிக்கு உட்பட்டதல்ல. தமிழினத்திற்கு ஆபத்தென்றால், தமிழரசு வாலிப முன்னணி தமிழரசு அமைப்புக்குள் இருந்துதான் ஆகவேண்டும் என்ற நியதியில்லை."

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிச் செயலாளர் திரு.ந.அருணாசலம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"மாவட்டசபை மசோதாவை அரசாங்கம் கைவிட்டுவிட்டது. இக்கோரிக்கை தமிழ்பேசும் மக்களின் உரிமைக்குரல். இதை அரசாங்கம் புறக்கணித்துவிட்டது. மாவட்டசபை இல்லையென்று தெரிந்த பின்னும், தேசிய அரசாங்கம் தமிழர்களை ஏமாற்ற முற்பட்டால் அதைத் தமிழினம் ஒருபோதும் அனுமதியாது.

தமிழினத்தைப் பாதிக்கும் சட்டங்களை உருவாக்கியது மட்டுமல்லாமல், தமிழரசுக்கட்சியையே நிலைகுலையச் செய்தது. தமிழரசுக்கட்சி தெரிந்தோ தெரியாமலோ தேசிய அரசு என்கின்ற யூ. என். பி.க் கட்சியுடன் சேர்ந்து ஏமாற்றப்படுகிற தென்பதை மறைக்க முற்படுவது தமிழினத்திற்குச் செய்யும் பெரும் துரோகம்.

தமிழரசுக்கட்சி, தன்னுடைய நிலையிலிருந்து தளர்ந்து, கட்சியின் இலக்கணச் சரியான முறையில் செயல்படுத்தாததினால், கட்சியோடு மக்களுக்கிருந்த தொடர்பு அற்றுப்போனதால் வடபகுதியில் இடதுசாரி இயக்கங்கள் புகுந்து சாதிக் கலவரத்தை உருவாக்கிவிட்டன. தமிழரசுக்கட்சியின் பலவீனம் வடபிரதேசத்தில் இடதுசாரிகள் புகுவதற்கு இடமளித்தது.

தமிழரசுக்கட்சியை அழிக்கவேண்டுமென்று சிங்களக் கட்சிகள் தீட்டிய திட்டத்தில் யூ.என்.பி. ஓரளவுக்கு வெற்றிகண்டுவிட்டது. பிரதமர் டட்லி சேனநாயக்கா தமிழரசுக்கட்சிக்கு முன்னிருந்து பின்புறம் குழிதோண்டுகிறார். இதைத் தமிழ்த் தலைவர்கள் மறைத்தாலும், நாம் மறைப்பதற்கில்லை.

தமிழ்த் தலைவர்கள், தமிழினத்திற்கு விடுதலை பெற்றுத்தர முடியாவிடில் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்ளட்டும். இன்றில்லைவிட்டாலும், ஒருநாள் சிங்களவர்களும் தமிழர்களும் சரிநிகர் சமானமாக வாழத் தமிழினம் வழிவகுத்தே தீரும்."

# கைக்குண்டு வீச்சில் ஒருவர் படுகாயம்

நல்லூர், ஞாயிறு

கரவெட்டி மேற்கில் நடந்த பயங்கர கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் காயமடைந்த கணபதி சிவரத்தினம், அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டார். இவரது இடது காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் சம்பந்தமாக பருத்தித்துறை பொலிஸார் கந்தன் செல்வராசா அல்லது இளையதம்பி என்பவரை சந்தேகத்தின் பேரில் தேடிவருகின்றனர்.

இக்கைக்குண்டு வீச்சு சம்பவம் பழைய கோபம் காரணமாக நடந்ததென்று விசாரணையின் போது தெரிய வந்தது.

பருத்தித்துறை பொலிஸைச் சேர்ந்த சார்ஜன் ஏ. இரத்தினசபாபதி விசாரணை நடத்தி வருகிறார். கைக்குண்டு வீச்சுக்காளான

## இன்று தீர்த்தோற்சவம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தீர்த்தத் திருவிழாவாகிய இன்றுகாலை 8 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 7 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் பின்னர் கொடி இறக்கமும் நிகழும்.

## உபந்நியாசம் செய்பவருக்கு பணமுடிப்பு

அளவெட்டி, சனி

உபந்நியாசம் செய்பவருக்கு பணமுடிப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 25 தினங்களாக கந்தப்புராண விரிவுரையை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் தொடர்ந்து நிகழ்த்திவரும்சைவப்பிரசாரகர் திரு வி. நல்லையாவுக்கு இந்த பணமுடிப்பை பக்தர்கள் வழங்க இருக்கிறார்கள்.

இவ்விரிவுரை தொடர்ந்து கிரிமலை தீர்த்தம் வரை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில்நடைபெறும்.

## கவீகரிப்புக்கு முன் பூர்வாங்க விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் நிலையம் கட்டுவதற்கு 'யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான காணி சுவீகரிக்கப்படுவதுசம்பந்தமாக மாநகரசபை பதில் ஆணையாளர் திரு லிங்கவேலு, யாழ். மாநகரசபை முன்னாள் மேயர்கள் ஆகியோரை அழைத்து பூர்வாங்கவிசாரணையொன்றை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நடாத்தவிருப்பதாக அறியப்படுகிறது.

குறிப்பிட்ட காணியைச் சுவீகரிப்பதற்கு விதிக்கப்பட்ட காலக்கெடு முடிந்துவிட்டதாலேயே அரசாங்க அதிபர் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிகிறது.

பதில் ஆணையாளர், முன்னாள் மேயர்கள் சிலர் காணி சுவீகரிப்புக்கு பலத்த ஆட்சேபம் தெரிவித்திருந்தனர்.

## புகைப்பதை நாசர் நிறுத்தினார்

கெயிரோ. ஜூலை 27

ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாசர் புகைபிடிப்பதை நிறுத்திக் கொண்டார். சிறிது உடல் நலக் குறைவடைந்திருக்கும் அதிபர் நாசர் வைத்திய சிகிச்சைக்காக சோவியத்யூனியனுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார். வைத்தியர்களின் ஆலோசனையின் மீது புகைப்பிடிப்பதை நிறுத்திக்கொண்டார்.

## அனலைதீவு ஐயனார் உற்சவம்

அனலைதீவு, சனி

அனலைதீவு ஐயனார் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 30-ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும். அடுத்த மாதம் 8-ந் திகதி தேர்த்திருவிழாவும், மாலை தீர்த்தமும் 9-ந் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெற்று 10-ந் திகதி வைரவருடன் உற்சவம் முடிவடையும்.

[illegible] ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வள்ளியம்மை மாதிரி கிராமம்

## தில்லையாடியில் நிறுவப்படும்

சென்னை ஜூலை 27

தென்னாபிரிக்காவில் மகாத்மா காந்தி நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தின்போது மகாத்மாவை நோக்கிவைத்த துப்பாக்கிக் குண்டை தன்மீது ஏந்தி உயிர்த்தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வள்ளியம்மை என்னும் பெண் பிறந்த தில்லையாடி என்ற கிராமத்தை "வள்ளியம்மைமாதிரிக்கிராமமாக" காந்தி நூற்றாண்டு நினைவாக அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசாங்கத்தின் ஆலோசனையின்மீது அமைக்கப்படவிருக்கும் "வள்ளியம்மை மாதிரிக் கிராமம்" பொதுமக்களின் நன்கொடைப் பணத்திலேயே அமைக்கப்படுமாம்.

# அராலி கிராமசபை எல்லை விபரங்கள்

யாழ்ப்பாணம். ஞாயிறு

புதிதாக நிறுவப்பட்டுள்ள அராலி கிராமசபையினர் எல்லை விபரங்கள்: 1969-ம் ஆண்டு ஜனவரி 1-ந் திகதி இப்புதிய கிராமசபை இயங்கும் இதற்கான தேர்தல் இவ்வருடம் நடைபெறவிருக்கிறது.

**1-ம் வட்டாரம் [அம்பாள்]**

வடக்கு: லம்டேம் பாலத்திலிருந்து கிழக்கு நோக்கி ஓடைக் குளம் வாய்க்காலின் மத்தியிலேூரமாக வழுக்கை ஆற்றின் மேலுள்ளபொதுக் கட்டு, வேலத்திணைக்களப் பாலத்தின்கிழகு அந்தத்தை சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்

கிழக்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி கிழக்கு எல்லைக்கோட்டின் ஓரமாக மீன்பிடித்துறைமுக வீதியின் கோடியைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்

தெற்கு: மீன்பிடித்துறைமுக வீதியின் கோட்டினால்,

மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்ட இடத்திலிருந்து வடக்கு நோக்கி மீன்பிடித்துறை வீதியேூரமாக அராலித்துறை - கிழுவானை - இரவலை பொதுக்கட்டு வேலைத்திணைக்கள வீதிச் சந்தி வரையும்; அங்கிருந்து மேற்கு நோக்கி குழுவானை இரவலை வீதியின் மத்தியிலேூரமாகவும் லம்டேம் பாலத்தைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்.

**2ம் வட்டாரம் (ஐயனார்)**

வடக்கு சிற்றொழுங்கை 2 வது மீன்பிடித் துறைமுக ஒழுங்கையைச் சந்திக்குமிடத்திலிருந்து வடக்கு நோக்கி 2வது மீன்பிடித் துறைமுக ஒழுங்கை யோரமாக கிழுவானை - இரவலை பொதுக்கட்டுத் திணைக்கள வீதியின் சந்தியைச் சந்திக்கும் வரையும். அங்கிருந்து கிழக்கு நோக்கி சொல்லப்பட்ட வீதியின் மத்தியோரமாக 1ம் வட்டாரத்தின் மேற்கெல்லையைச் சந்திக்கும் வரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் கிழக்கு: கடைசியாகச்சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்கு நோக்கி மீன்பிடித்துறை முகவழியின் மத்தியோரமாக சொல்லப்பட்ட வீதியின் தென்கோடியைச் சந்திக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் தெற்கு: கடைசியாக சொல்லப்பட்ட இடத்திலிருந்து தெற்குநோக்கி கிராம எல்லையோரமாக 223 மீன்பிடி துறைமுக ஒழுங்கையின் கோடியினது மத்தியைச் சந்திக்கும் வரையப்பட்ட ஒரு கோட்டினால் மேற்கு: கடைசியாகச் சொல்லப்பட்டவிடத்திலிருந்து வடக்கு நோக்கி 223 மீன்பிடித் துறைமுக ஒழுங்கையின் மத்தியோரமாக அராலித்துறை வீதியைக் கடந்து வடக்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும், மீண்டும் வடக்கு நோக்கியும் சொல்லப்பட்ட ஒழுங்கையின் மத்தியோரமாக கழுவானை — இரவலை பொதுக்கட்டுவேலைத்திணைக்களவீதியைச் சந்திக்குமவரையும் வரையப்பட்ட ஒரு கோட்டினால்

3ம், 4ம் வட்டார எல்லை விபரங்கள் நாளை வெளிவரும்.

## குலரத்தின கொலைவழக்கு

### தீர்ப்பு இன்று வழங்கப்படலாம்

கொழும்பு, சனி

திருமதி பத்மினி குலரத்தின கொலைவழக்கு இன்று திரு. ஏர்ட்லி பெரேரா தமது தொகுப்புரையை முடித்துக் கொண்டபின் எதிர்தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி.பொன்னம்பலம் தமது தொகுப்புரையை ஆரம்பித்துநிகழ்த்தினார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிரதம நீதியரசரின் முடிவுரை முடிந்ததும் தீர்ப்பு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வல்வையில் ரூபா 50,000 பொருட்கள் சிக்கின

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறையில் இன்று மாலை 50,000 ரூபாய் பெறுமதியான கராம்பு, பாக்கு, புளி, ஒவல்டின், வெங்காயம் ஆகியவற்றை சுங்கக் கலெக்டர் திரு. செனிவரத்தின தலைமையில் சென்ற [illegible] கைப்பற்றியது. விசாரணை தொடர்ந்துநடக்கிறது.

## அமைச்சர் திருச்செல்வம் நாயகா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தலைநாயக்காவை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு.வேர்ணன் அபயசேகரா சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் றிபேக் கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் புகையிரத நிலையத்தில் வரவேற்பர்.

## "தொடர்ந்து பணியாற்றவும்"

சுழிபுரம், சனி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. வி. தம்பு ஓய்வுபெறும்வயது வரை அதிபராகத் தொடர்ந்து இருக்கும்படி இப்பகுதியைச் சேர்ந்த ஒரு தூதுக்குழு அவரை வேண்டியுள்ளது.

சென்னை, ஜூலை 27

தேசபக்தரும், கதர் அபிவிருத்திக்கு தொண்டாற்று வருமான திரு. ஏ. கே. சந்திரசேகர முதலியார் விடான்ஸி ஆஸ்பத்திரியில் காலமானார். 74 வயதான இவர் கடந்த ஒன்றரை மாதங்களாக நோயுற்றிருந்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 6[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org